**O.S. No.214/2024**

**Deposition of P.W. 1**

**Dated : 23.03.2026**

**Name :திரு. சுகுமாறன்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது மண்பானை தயார் செய்து தொழில் செய்து வருகிறேன். தொழிலை என்னுடைய பெயரில் செய்து வருகிறேன். பிரதிவாதியும் மண்பானை தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது செய்கிறாரா என்று தெரியாது. கன்னியாகுமரி மாவட்ட மண்பாண்ட குடிசை தொழிலாளர்கள் நல சங்கம் சுங்கான் கடையில் உள்ளது. நான் சங்கத்தின் தலைவர் ஆவேன். தற்போதும் பிரதிவாதி சங்கத்தின் செயலாளராக உள்ளார். வா.சா.ஆ.1 ல் உள்ள சாட்சிகள் யார் என்றால் பகவதி ஈஸ்வரன் மற்றும் ரவி ஆவார்கள். இருவரும் சங்கத்தின் ஆலோசகராக உள்ளார்கள். சங்கம் தொடங்கி ஆண்டு முதல் நான் தான் தலைவராக உள்ளேன். சங்கத்தின் வரவு செலவுகள் குறித்து தணிக்கையர் இடம் தணிக்கை செய்வது வழக்கம் என்றால் செயலாளர் செய்வார். அதை தலைவரும் கையெழுத்து செய்வார் என்றால் இல்லை. தணிக்கை குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எனக்கு கீழ் 6 நபர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு சம்பளத்தை நான் பணமாக கொடுத்து வருகிறேன். சம்பளத்தை வரவு செலவாக குறித்து வைக்கவில்லை. மாதம் ரூபாய் 35,000 வருமானம் ஆகும். 25,000 செலவு போக 10,000 மீதம் இருக்கும். எனக்கு வேறு வருமானம் எதும் இல்லை. கடந்த 5 ஆண்டுகளாக பிரதிவாதி செயலாளராக இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு

எந்த தகவலும் சொல்லாமல் அவரை நாங்கள் ஒதுக்கிவைத்துள்ளோம் என்றால் சரியல்ல. சங்கத்திற்கு மினிட் புத்தகம் உள்ளது. அதில் பொது குழு கூடும் போது அனைவரும் கையெழுத்து செய்வார்கள் என்றால் சரிதான். 1 வருடமாக எந்த கூட்டமும் நடத்தப்படவில்லை. பொதுவாக வருடத்திற்கு 4 செயற்குழு மற்றும் 3 பொது குழு கூட்டம் நடைபெறும். கடைசியாக நடந்த கூட்டத்தில் பிரதிவாதி பங்கேற்று கையெழுத்து செய்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். எனக்கு தனியாக சேமிப்பு உள்ளது. சேமிப்பானது வங்கி கணக்கில் துலங்கும். வங்கி கணக்கில் குறைந்தப்பட்ச இருப்பு தொகை வைத்துள்ளேன். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த சமயத்தில் அந்த தொகை என்னுடைய வங்கி கணக்கில் இல்லை என்றால் சரிதான். அதனால் எந்த தொகையை கொண்டு பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் தலகுளம் சொசைட்டில் வைத்து எழுதப்பட்டது. பிரதிவாதியை ளமிரட்டி கட்டாயப்படுத்தி ஆலோசகர் உதவியுடன் வா.சா.ஆ.1 எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்லி பிரதிவாதி வா.சா.ஆ.1 யை எழுதினார். நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக இருந்ததால் எனக்கு எழுத தெரியும். என்னுடைய அறிவுறுத்தல் படி பிரதிவாதி வா.சா.ஆ.1 யை எழுதினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 யை பிரதிவாதி கையொப்பம் இரண்டு இடங்களில் உள்ளது என்றால் சரிதான். வெற்று காகிதத்தில் பிரதிவாதி இடம் கையெழுத்து வாங்கிவிட்டு பின்பு ஸ்டாம் பேப்பரிலும் மிரட்டி கையெழுத்து வாங்கினோம் என்றால் சரியல்ல. யாருடைய கைரேகை என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள நிபந்தனைகள்

பிரதிவாதி தான் எழுதினார். வா.சா.ஆ.1ல் வட்டி குறித்து சொல்லபப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடன் பத்திரம் இல்லை என்றும் பிரதிவாதியை மிரட்டி எழுதப்பட்ட கடிதம் என்றும் கடன் பத்திரத்திற்கு உண்டான அம்சங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் பெறவில்லை என்றும் பொய்யான ஆவணத்தை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 31.1.2024ம் தேதி பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதனை மறுத்து நான் அறிவிப்பு அனுப்பினேன். உண்மையை மறைத்து 76வயதான முதியவரை துன்புறுத்த வேண்டும் என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.